எம்.சி.ஓ.பி எண்: 4804/2022 தேதி: 11.02.2026

மசா. : 1

பெயர் : சந்திரகலா

க /பெ. : குமார்

வயது : 42

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் செங்கல்பட்டு மாவட்டத்தில்சூனாம்பேட்டையில் குடியிருக்கிறேன். விபத்து நடந்த சாலைமேல் மருவத்தூர் பைபாஸ் சாலை. விபதது நடந்த இடத்திற்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே எவ்வளவு கிலோமீட்டர் என்று தெரியாது. பேருந்தில் வந்தால் ஒரு மணி நேரம் ஆகும். விபத்து குறித்து என் மாமானருக்கு தெரிந்தவர் போன் மூலம் தகவல் கொடுத்தார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. நான் கேள்விப்பட்ட விவரத்தை தான் சத்தியபிரமாணாவாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரி. இருசக்கரவாகனத்தை என் மகன் ஆகாஸ் ஓட்டினான். அன்றை தினம் என் மகனின் வயது 16. என் கணவர் பின்னால் அமர்ந்திருந்தார். மருத்துவமனைக்கு என் மகன் தான்அழைத்து சென்றான். 5 மாதமாக மருத்துவமனையில் டையாலிஸ் செய்தார். அந்த வண்டி எங்களுக்கு சொந்தமானது. வண்டி ஓட்ட என் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. என் மகனும் என் கணவரும் தலைக்கவசம் அணிந்திருந்தார்கள். வீட்டில் இருந்து தலைக்கவசம் அணிந்து சென்றார்கள். நான் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் சத்தியபிரமாணாவாக்குமூலத்தில் தவறான விசயங்களை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து எனது மகனின் அதிவேகமாகவும், அஜாாக்கிருதையாகவும் சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் இருசக்கரவாகனம் தான். மனுவில் கார் என்றுகுறிப்பிட்டுள்ளேன் என்றால் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விபத்து 1ம் எதிர்மனுதாரரின் அஜாாக்கிருதையாக நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றாலும் அவைகள் கிடைக்கதக்கதல்ல என்றாலும் சாியல்ல. விபத்து என்னுடைய மகனின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால்

2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.